# இளைப்பாறுதல்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# கவலைப்பட்டு போராடிக் கொண்டிருக்க தேவையில்லை. நீங்கள் இளைப்பாறுதலைக் கொண்டிருக்கிறீர்கள்; அவ்வளவுதான்



# செய்தி: 56-01-21 உள் திரை

19. சில இரவுகளுக்கு முன்பு, கிளார்க் கவுண்டி மெமோரியல் மருத்துவமனையில் மரித்து கொண்டிருக்கும் ஒரு இளம் பெண்ணின் அவசர அழைப்புக்கு நான் அழைக்கப்பட்டேன். மேலும் பல ஆண்டு களுக்கு முன்பு நான் போதகராக இருந்த கூடாரத்தில் அவள் உறுப்பினராக இருந்ததாக அவள் சொன்னாள். நான் அவளுடன் பேசுவதற்காக இந்த இளம் பெண்ணிடம் சென்ற போது, அவள் பிராண வாயு இயந்திரத்தின் கீழ் இருந் தாள். நான், “நீங்கள் கூடாரத்திற்கு வந் திருக்கிறீர்கள் என்று அவர்கள் சொல்கி றார்கள்?” என்றேன்.

அவள் "ஆமாம் சகோதரர் பிரன் ஹாமே, நான் வந்தேன்" என்று சொன் னாள்.

நான் "நீங்கள் மரித்துக் கொண்டிருக் கிறீர்கள் என்பதை அறிகிறீர்களா" என்று சொன்னேன்.

அவள், "நான் அறிகிறேன், சகோதரர் பிரன்ஹாம்" என்றாள். அவள் ஒரு குழந்தைக்கு தாய் என்று கூறினார். அவளுக்கு பத்தொன்பது அல்லது இருபது வயது இருக்கும். அவளுக்கு நான்கு மாதக் குழந்தை இருந்தது. ஆனால் அதற்கு...பெரியவர்கள் வரிகளுக்கு இடையில் இருப்பதை புரிந்து கொள்ள வும். அவள் யூரீமிக் என்னும் விஷத்தை உட்கொண்டிருந்தாள். ஓ மற்றும் பல காரியங்கள். மருத்துவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை, ஆனால் அவளை

ஆனால் அவளை பின்னால் படுக்க வைத்து மரணத்திற்காகக் காத்திருந்தார்கள். அவ்வளவு தான். மருத்துவ அறிவியலி னால் அவளை எதுவும் செய்ய முடிய வில்லை.

மேலும் அவள் ஆண்டவரை சந்திப் பதற்கு ஒரு குழந்தையாக சென்றுக் கொண்டிருந்தாள், நான் சொன்னேன், "சகோதரி, அந்த தொட்டில் பட்டியலில் உங்களுக்கு நினைவிருக்கிறதா, நீங்கள் தொட்டில் பட்டியலில் உள்ள ஐக்கியத்தில் ஞானஸ்நானம் பெற்றீர்கள்." நான், “உங்க ளுக்கு என்ன காரியம் ஏற்பட்டிருக்கிறது?” என்றேன்.

அவள், “சகோதரர் பிரன்ஹாம், நான் உங்களுக்குச் சொல்கிறேன்” என்றாள். கர்த்தராகிய இயேசுவை நான் இன்னும் நேசிக்கிறேன் என்றாள். ஆனால், "நான்-

அவரைச் சேவிப்பது எனக்கு மிகவும் கடினமாக இருக்கிறது" என்று கூறினாள்.

20. இப்போது, பெரும்பாலான கிறிஸ் தவர்களுடைய வாழ்வில் நான் அதைத் தான் காண்கிறேன். பெரும்பாலும், நான் அவ்வாறு கூறுவதை வெறுக்கிறேன், ஆனால் அது உண்மைதான். கிறிஸ்த வத்தை பிரசங்கிக்கக்கூடிய பெரும்பாலான மக்கள், அதை தக்க வைத்துக் கொள் வதற்கு கடினமாக போராட வேண்டியதாய் உள்ளது. வேதாகமத்தைப் பற்றிய சரியான போதனை இல்லாததால் தான் என்று நான் நம்புகிறேன். அதை தக்க வைத்துக் கொள் வதற்கு கடினமாக போராட வேண்டியதாய் உள்ளது. அவர் அதை தக்க வைத்துக் கொண்டிருக்கிறார். முழு கிறிஸ்தவமும் பிரதானமாக இளைப்பாறுதலை அடிப் படையாகக் கொண்டிருக்கிறது. “வருத்தப் பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள்

எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றார். கவலைப்பட்டு போராடிக் கொண் டிருக்க தேவையில்லை. நீங்கள் இளைப் பாறுதலைக் கொண்டிருக்கிறீர்கள்; அவ் வளவுதான். இளைப்பாறுதல் கொடுக்க பட்ட பின்பு நீங்கள் சமாதானத்துக்குள் செல்கிறீர்கள். அதிலேயே எல்லா காரிய மும் முடிந்து விட்டது. "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்து மிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர் களை மகிமைப் படுத்தியுமிருக்கிறார்" என்று வேதாகமம் மேற்கோள் காட்டுகிறது.

21. கவனியுங்கள். நீங்கள் ஒன்றுமே செய்ய வேண்டாம் அல்லது உங்களால் என்ன தான் செய்ய முடியும். அது தான் கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு

எல்லாம் செய்து முடித்து விட்டாரே. நீங்கள்... வர முடியாது.

யாரோ சொன்னார்கள், "சரி, நான் உங்களுக்கு சொல்கிறேன், நான் - நான் இதை விட்டுவிட்டு, தேவனைத் தேடச் சென்றேன். எந்த ஒரு மனிதனும் தேவனை தேடவில்லை. மனிதன் தேவனைத் தேடுவதில்லை; தேவன் தான் மனிதனைத் தேடுகிறார். ஆதியில் இருந்த ஏதேன் தோட்டத்தின் தொடக்கமே அதை நிரூபித்தது. "பிதாவே, பிதாவே, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" என்று சத்தமிட்டுக் கொண்டே ஆதாம் தோட்டத்தின் வழியே ஓடிக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் தேவன் ஏதேன் தோட்டத்தின் வழியே சென்று, “ஆதாமே, ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்?” என்று சொன்னார்.

மற்றும் ஆதாம் மறைந்திருப்பது, அது மனிதனின் இயல்பாக இருக்கிறது.

22. மேலும் இயேசு சொன்னார் "பிதா ஒருவனை என்னிடத்தில் இழுக்காவிட் டால் ஒருவனும் என்னிடத்தில் வரான். "இது பற்றி நீங்கள் எதுவும் செய்ய முடியாது. மேலும் இயேசு ஒரு தவறான நோக்கத்திற்காக மரிப்பதற்காக கல்வாரிக்கு வரவில்லை. அவர் அங்கு வந்து, “சரி, ஒருவேளை, நான் மரித்து விடுவேன்; சிலர் நான் மரித்து விட்டதைக் கண்டு சிலருக்கு பரிதாபமாக இருக்கும், சிலர் நான் மரிப் பதை பார்ப்பார்கள். ஒருவேளை அவர்கள் வந்து தேவனைச் சேவிப்பார்கள்." தேவன் தம்மிடம் வருவதற்கு தேவனுடைய முன்னறிவின் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை மீட்பதற்காக இயேசு ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக வந்தார். அது சரிதானே. வேதாகமத்தை அறிந்த அறிஞர்

கள் உங்களுக்குத் தெரிந்திருதால், முற்பிதாக்களும் ஒரு முன்மாதிரியை உருவாக்கியுள்ளனர். ஆபிரஹாம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன். ஆபிரஹாம் ஒன்றுமில்லாமல் இருக்கும்போது, ஒருவனாக எண்ணப்படாமல் இருக்கும் போது தேவன் அவனை அழைத்தார். ஒரு சாதாரண மனிதன். அவன் ஒரு நல்ல மனிதனாக இருந்ததிற்காக அல்ல, ஆனால் தேவனுடைய முன் அறிவின்படி ஆபிரகாமை தெரிந்து கொண்டார். ஆபிரகாம் தெரிந்து கொள்ளபடுத்தல், ஈசாக்கு நீதிமானாக்கப்படுதல், யாக்கோபு கிருபை, யோசேப்பு பூரணம். அதோடு முடிவு பெற்றது. யோசேப்பு தான் ஒரு பூரணமான ஒன்று. (பாருங்கள்?), இளவரசன் - ஐஸ்வர்யத்தின் இளவரசன்.





# புயல்சீறும், எல்லாவித துன்பங்களும் வரும். ஆனாலும் நாம் நங்கூரம் பாய்ச்சப்பட்டு இருக்கிறோம். அது போதுமானது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 56-01-01 ஏன் ஜனங்கள் அலைகழிக்கப்படுகிறார்கள்? (உள்ளான இளைப்பாறுதல்), Para 66-77

நம்முடைய விசுவாசமானது எதிலும் இளைப்பாறுவது கிடையாது. **ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய விசுவாசம் இளைப்பாறத் தக்கதான ஒரு திடமான இடத்தையுடையவனாயிருக்க வேண்டும். அசையாத தேவ வார்த்தை என்னும் இளைப்பாறும் ஸ்தலத்தின் மேல் மட்டுமே ஒரு கிறிஸ்தவன் (உண்மையாக மறுபடியும் பிறந்த கிறிஸ்தவன்) தன்னுடைய விசுவா சத்தை (அல்லது அவளின் விசுவாசத்தை) இளைப்பாறச் செய்ய முடியும்.** அதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். விசுவாசமானது, புதையுண்டு போகிற மனிதனின் வேத

சாஸ்திரத்தினாலோ, கொள்கையினாலோ அல்லது சபையின் கட்டுப்பாடுகளி னாலோ, கட்டப்படவில்லை. **ஆனால் ஒரு உண்மையான விசுவாசிக்கோ, தேவனுடைய வார்த்தையை அவன் அணுகும் போதெல் லாம் அவனுடைய விசுவாசமானது திடமாக அசையாமல் இளைப்பாறிக் கொண்டிருக்கும்.**

ஒரு சில இரவுகளுக்கு முன்பு நான் பலமாக பிரசங்கிக்க வேண்டும் போல விருப்பங் கொண்டேன். ஆகவே என் மனைவியிடம் படுக்கையிலிருந்தவாறே இரவு 12 மணி வரை, இயேசு எவ்வளவு மகிமை பொருந்தியவர் என்பதைக் குறித்து பிரசங்கித்தேன். அச்சமயத்தில் பிரசங்கத்திற்கேற்ற பொருள் ஒன்று என் இருதயத்தில் தோன்றி நான் இளைப்பாறக் கூட முடியாதபடி என்னை எரித்து விட்டது.

அப்பொழுது நான் என் மனைவியைப் பார்த்து, “அருமையான மனைவியே, இன்னும் சிறிது நேரம் உன்னிடம் பிரசங்கிக்க விருப்பமாயுள்ளேன்” என்று கூறினேன். கர்த்தருடைய கிருபையினால் அவளும் எழுந்து அமர்ந்து எனக்குச் செவி கொடுத்தாள்.

**நான் அவளை நோக்கி, “கிறிஸ்துவ விசுவாசமானது முற்றிலும் இளைப்பாறு தலையே சார்ந்திருக்கின்றது. அது உண்மை. ஒரு கிறிஸ்தவன் அலைந்து திரிய வேண்டு வதில்லை. ஒரு கிறிஸ்தவன் காரியங்களைக் குறித்து குழப்பமுற்று கவலைப்பட வேண்டு வதில்லை. ஏனெனில் அவன் இளைப்பாறிக் கொண்டிருக்கிறான். அவனுடைய காரியங் கள் யாவும் முற்றுப் பெற்று விட்டன. ஓ வியாதியோ அல்லது ஏமாற்றங்களோ வரும். ஆனால் கிறிஸ்தவனோ, தேவன் எதை**

**செய்தாரோ அதைக் காத்துக் கொள்வா ரென்று இளைப்பாறிக் கொண்டிருக்கிறான். காரியங்கள் எப்படியிருந்தாலும் வியாதியோ, மரணமோ, பசியோ, வேறெதுவானாலும் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மை பிரிக்க மாட்டாதென்று அறிந்தவனாய் இளைப்பாறிக் கொண்டிருக்கிறான். நாம் இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம். பழைய கப்பலானது இங்கேயும் அங்கேயும் அலைக்கழிக்கப்படட் டும். ஆனாலும் நங்கூரமானது ஸ்திரமாக அதை தாங்குகின்றது.**

ஒரு சமயம் நான் விமானத்தில் தாழ பறந்துக் கொண்டிருந்த போது, ஒரு துறைமுகத்திற்கு மேலாக பறந்து வந்தேன். அங்கே ஒரு பழைய பெரிய கப்பல் மிதந்து கொண்டிருந்தது. அதனுடைய பாய்மரம் அவிழ்த்து விடப்பட்டிருந்தது.

அப்பொழுது ஒரு பலத்த புயல்காற்று அங்கு வீசியது. அக்கப்பலோ அலைக் கழிக்கப்பட்டது அது முன்பாகவும், பின்பா கவும் அலைக்கழிக்கப்பட்டது. அலைகள் மேலே உயர்ந்து ஒன்று கப்பலுக்குள்ளும், அடியிலுமாக சென்றவாறு இருந்தன. அப்பொழுது நான் ஆச்சரியப்பட்டு, “இது மூழ்காததின் காரணம் என்ன?” என்று கேட்டேன். அப்பொழுது என்னோடு அமர்ந்திருந்தவர் என்னிடம், “அக்கப்பல் நங்கூரம் பாய்ச்சப்பட்டு இருக்கிறது, ஆகவே அது அலைகளினூடே சென்றா லும் மூழ்காது” என்று கூறினார்.

**அப்பொழுது நான், “ஓ, கர்த்தருக்கே துதியுண்டாவதாக நமக்கு ஓர் நங்கூரம் உண்டு” என்று கூறினேன். சில அலைகள் மேலேயும் சில அலைகள் கீழாகவும் சென்**

றாலும், நங்கூரம் பாய்ச்சப்பட்டு இருக்கும் வரை அதைக் குறித்து கவலையில்லை. கப்பலானது தாங்கும் வேலையைச் செய்ய வில்லை. நங்கூரம் தான் தாங்கும் வேலை யைச் செய்கின்றது. நான் எப்படியிருக்கிறேன் அல்லது எப்படியிருப்பேன் அல்லது எப்படி யிருந்தேன் என்பதல்ல. அவர் இப்பொழுது எப்படியிருக்கிறார் என்பதும், அவர் நமக்காக என்ன செய்தார் என்பதும் தான் காரியம்.

நான் என்ன செய்ய முடியும் என்பதல்ல. அவர் என்ன செய்தார் என்பதே காரியம். வரப்போகின்ற கூட்டங்கள் என்னவா யிருக்கும் என்பதில் என்னுடைய விசுவாசம் நங்கூரம் பாய்ச்சப்படவில்லை, என்னுடைய திறமை என்னவாயிருக்கும். அல்லது எந்த சபையில் நான் சேருவேன். அல்லது எந்த ஜனங்களோடு என் ஐக்கியத்தை வைத் துக்கொள்வேன் என்பதில் என் விசுவாசம்

**இளைப்பாறிக் கொண்டிருக்கவில்லை. மாறாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் முடிக்கப்பட்ட கிரியைகளின் மேல் என்னுடைய விசுவாசமானது முழுவதுமாக இளைப் பாறிக் கொண்டிருக்கின்றது. அது ஏற்கனவே என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.** அவரை மரித்தோரிலிருந்து தேவன் எழுப்பினதால் அவரை நீதியுள்ளவராக விளங்கச் செய்தார். “இவர் என்னுடைய நேசக்குமாரன், இவரில் பிரியமாயிருக்கி றேன்” என்று கூறினார். **நம்மை நீதிமான் களாக்க தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.** இதைக் குறித்து அந்த கவிஞன் பாடினதில் வியப்பொன்று மில்லை.

“ஜீவித்திருந்து என்னை அவர் நேசித்தார்.

அவர் மரிக்கையில் என்னை இரட்சித்தார்.

அடக்கத்தில் என் பாவங்களை தொலைதூரம் எடுத்துச் சென்றார்.

என்றாவது ஓர் நாள் அவர் வருவார்.

ஓ அது என்னே மகிமையின் நாள்"

**புயலடிக்கும் கடல்களில் ஒரு கிறிஸ்தவன் இத்தகைய நம்பிக்கையின் மேல் தான் இளைப்பாறிக் கொண்டிருக்கிறான். புயல் சீறும், எல்லாவித துன்பங்களும் வரும். ஆனாலும் நாம் நங்கூரம் பாய்ச்சப்பட்டு இருக்கிறோம். அது போதுமானது. அது ஒரு போதும் மூழ்காது.**





உங்களை அவரிடம் ஒப்புவியுங்கள்,
அவர் உங்களுக்காக ஜெயங்கொள்வார்.
அதற்கான வழியை அவர்
அறிந்திருக்கிறார்; நமக்கோ அது
தெரியாது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 63-08-25M நான் எப்படி ஜெயங்கொள்வது?

65 கவனியுங்கள் இக்காலத்துக்கு முன்னடையாளமாயுள்ள நோவாவின் நாட்களிலே; இயேசு அதைக் குறிப்பிட்டு, "நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" என்றார் (மத். 24:37).

கவனியுங்கள், ஜலப்பிரளயத்துக்கு முன்னால் இருந்த காலத்தில், ஒருக்கால் லட்சக்கணக்கானவர் இருந்திருக்கக் கூடும். ஆனால் ஜெயங்கொண்டவர்கள் எட்டு பேர் மாத்திரமே.

அவர்கள் நோவாவின் மூன்று குமாரர்கள், அவர்கள் மனைவிகள், நோவாவும் அவன் மனைவியும்.

எட்டு பேர் ஜெயங்கொண்டு, சரியான நேரத்தில் பேழைக்குள் பிரவேசித்தனர்.

அவர்கள் எப்படி அதை செய்தனர்? அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்தனர்.

அவர்கள் பேழையின் வாசலுக்கு வெளியே மாட்டிக்கொள்ளவில்லை. அவர்கள் வாசலுக்கு உள்ளே இருந்தனர்.

66 **ஓ, என் அன்பார்ந்த நண்பர்களே, வாசல் அடைபடக் காத்திருக்காதீர்கள்.**

இயேசு, "நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷ

குமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" என்றார்.

யாராகிலும் வாசலுக்கு வெளியே மாட்டிக் கொண்டால்.... அவர்களில் அநேகருக்கு நல்லெண்ணம் இருந்திருக்கக் கூடும். "என்றாகிலும் ஒரு நாள் அது நடக்கும் போது, நாங்கள் சகோ.நோவாவுடன் உள்ளே சென்று விடுவோம். அவர் மிகவும் நல்லவர்" என்று நினைத்துக் கொண்டிருக்கக் கூடும்.

ஆனால் பாருங்கள், அது எட்டு பேரை மாத்திரமே உள்ளே விட்டது.

67 இப்பொழுது, சற்று ஆழ்ந்து சிந்தியுங்கள். நீங்கள் அதைக் குறித்து கவலையற்றவர்களாய் இருப்பீர்களானால், துரிதமாக உள்ளே வந்து விடுங்கள்.

ஏனெனில் எந்த நேரத்திலும் வாசல் அடைபடக்கூடும்.

68 தேவனுடைய திட்டத்தில் எப்பொழு துமே ஒரு பேழை (ark) இருந்து வந்துள் ளது.

நோவாவின் காலத்தில் அவருடைய ஜனங்களை இரட்சிக்க ஒரு பேழை இருந்தது.

நியாயப்பிரமாணத்தின் காலத்தில் ஒரு உடன்படிக்கை பெட்டி (ark) இருந்தது. அவர்கள் உடன்படிக்கை பெட்டிக்குப் பின்னால் சென்றனர்.

இப்பொழுது மூன்றாம் யுகம் - நோவாவின் காலம், மோசேயின் காலம், தற்போதைய காலம்.

இப்பொழுது ஒரு பேழை உள்ளது. அது ஸ்தாபனம் அல்ல, அது நீங்கள் செய்யும் நற்கிரியைகள் அல்ல; அது ஒரே ஆவி . 1 கொரி. 12:13: நாம் எல்லாரும் அந்த ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக, அந்த ராஜ்யத்தின் ஆதிக்கத்துக்குள் ஞானஸ்நானம் பண்ணப் படுகிறோம், ஒரே ஆவியின் ஞானஸ் நானம். எவ்வளவு நல்லவர்களாயிருந் தாலும், எவ்வளவு கெட்டவர்களாயிருந் தாலும் நீங்கள் எப்படி இருந்தாலும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் நீங்கள் அந்த ராஜ்யத்துக்குள் வந்து விடுகிறீர்கள். பாருங்கள்? அந்த ஒரு வழியில் மாத்திரமே நீங்கள் ஜெயங் கொள்ள முடியும்.

**சிந்தப்பட்ட இரத்தத்தின் கீழுள்ள அனை வரும் ஜெயங்கொண்டவர்கள்; ஏனெனில்**

**நீங்களாகவே ஜெயங்கொள்ள முடியாது. அவரே உங்களுக்காக ஜெயங்கொள்ளு கிறார். நீங்கள் இளைப்பாறிக் கொண்டிருக் கிறீர்கள்...**

69 **"சகோ. பிரன்ஹாமே, நான் அதற்குள் இருக்கிறேன் என்று எப்படி அறிந்து கொள்வது?" நீ எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறாய் என்பதை கவனி.**

**நீ சுற்றிலும் பார். நீ எந்த முயற்சியுமின்றி தானாகவே அந்த வாழ்க்கை வாழ்கிறாயா என்று பார்.**

**இல்லாவிட்டால், நீ கடினமாக முயற்சி செய்து அந்த வாழ்க்கை வாழவேண்டி யுள்ளதா? அப்படி செய்ய முயலாதே.**

70 அது குழந்தையின் கையை சட்டை கைக்குள் நுழைப்பது போன்றது. (பாருங்

கள்?). அது எழுந்து, கீழே விழுந்து, புரண்டு, எல்லாம் செய்யும். பாருங்கள்? ஆனால் அந்த குழந்தையால் தானாகவே கையை சட்டைகைக்குள் போடமுடியாது.

"தேனே ஆ உன் சட்டையை போட்டுக் கொள்" என்று சொல்வீர்களானால், அதனால் செய்ய முடியாது.

அது கையை மேலே தூக்கும், கீழே போடும், அதன் கை எல்லாவிடங்களிலும் இருக்கும்.

அதற்கு ஆடாத உங்கள் கை அவசியம்.

**ஓ, என் கையை பிதாவினிடம் சமர்ப்பித்து, "கர்த்தராகிய இயேசுவே, என்னால் செய்ய முடியவில்லை. எனக்குதவி செய்யும். என் சட்டையை எனக்கு அணிவியும். நான் முயற்சி**

**செய்வதை விட்டு விடுகிறேன்" என்று கூறு வதற்கு எவ்வளவு மகிழ்ச்சியுள்ளவனாயிருக்கி றேன் அவரே அதை செய்யட்டும்.**

71 பாருங்கள், அந்த குழந்தை முயன்று கொண்டேயிருந்து, "என்னால் முடிய வில்லை, என்னால் முடியவில்லை" என்று கூறுமானால், அது எல்லாவிடங்களுக்கும் நகர்ந்து சென்றாலும் அதனால் முடியாது.

அப்படித்தான் உங்களாலும் செய்ய முடியாது. என்னாலும் செய்யமுடியாது. **ஆனால் நாம் அமரிக்கையாயிருந்து, அவரிடம் நம்மை சமர்ப்பித்து, "கர்த்தாவே, இதோ நான் இருக்கிறேன், நான் ஒன் றுமற்றவன். என்னை சமர்ப்பிக்கிறேன். என் கையை சரியான இடத்தில் நுழைப்பீராக" என்று கூறி அவர் செய்ய விட்டுக்கொடுப் போமானால், அதுதான் வெற்றி. அதுதான் ஜெயங்கொள்ளுதல்.**

72 நீங்கள் ஜெயங்கொள்ள வேண்டியது உங்களையும், உங்கள் கருத்துக்களையும் உங்கள் காரியங்களையுமே. **உங்களை அவரிடம் ஒப்புவியுங்கள், அவர் உங்களுக்காக ஜெயங்கொள்வார். அதற்கான வழியை அவர் அறிந்திருக்கிறார்; நமக்கோ அது தெரியாது.**

73 நோவாவின் காலத்தில் ஜெயங்கொண்டவர்கள் எட்டு பேர் இருந்தனர். அவர்கள் தான் உள்ளே பிரவேசித்தனர். அவர்கள் உள்ளே மாட்டிக்கொண்டனர்.

நண்பர்களே, இதை கேளுங்கள். அவர்கள் இதை ஒலிப்பதிவு செய்கின்றனரென்று நம்புகிறேன். அது தொலைக்காட்சியில் இருந்தாலும் இல்லாமற்போனாலும் - மன்னிக்கவும், ஒலிநாடாவில் இருந்தாலும் இல்லாமற்போனாலும் - நீங்கள் என்ன

செய்தாலும், இப்பொழுது யார் கேட்டுக் கொண்டிருந்தாலும், இனிமேல் யார் கேட் டாலும், காலம் மிகவும் தாமதமாகி விட்டது.

உங்களுக்கு நல்லெண்ணம் இருக்கக் கூடும். ஆயினும் நீங்கள் உள்ளே வந்துவிடுங்கள்.

**நீங்கள் கஷ்டப்பட்டு முயற்சி செய்யா தீர்கள்.**

**"விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவ னாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்" (ரோமர் 9:16).**

**தேவன் அதை செய்யட்டும்.**

**உங்களை அவரிடம் ஒப்புவித்து, தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்னும் பரிபூரண,**

**திருப்தியான விசுவாசத்துடன் நடந்து செல்லுங்கள்.**

அது ஒரு ஸ்தாபனத்தை சேர்வதோ, அதை விட்டு வேறொரு ஸ்தாபனத்தை சேர்வதோ, அதை விட்டு வேறொரு ஸ்தாபனத்தை சேர்வதோ, இங்கும் அங்கும் வேறெங்கும் ஓடுவதோ, இதை முயற்சி செய்வதோ கிடையாது.

**உங்களை தேவனிடம் ஒப்படைத்து அவருடன் நடந்து செல்லுங்கள்.**

**சமாதானத்துடன், அமைதியுடன், யாரும் உங்களை தொந்தரவு செய்யாதபடிக்கு, அவருடன் நடந்து கொண்டேயிருங்கள்.** அதுவே சரியான முறை.



# தேவன் ஆபிரகாமுக்கு நிபந்தனையற்ற ஒரு வாக்குத்தத்ததை உண்டுபண்ணினார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 57-09-08E எபிரெயர், ஆறாம் அதிகாரம் #2

402. **கவனியுங்கள். தேவன் ஆபிரகாமுக்கு நிபந்தனையற்ற ஒரு வாக்குத்தத்தை உண்டுபண்ணினார்.**

**இப்பொழுது காத்திருங்கள், ஆபிரகாம் ஒரு காரியத்தையும் செய்ய வேண்டியதாயிருக்கவில்லை. தேவன், "நான் அதை ஏற்கெனவே செய்துவிட்டேன்" என்றார்.**

403. தேவன் ஆதாமுக்கு ஒரு வாக்குத்தத்தை பண்ணி, "ஆதாமே, நீ இதைத் தொடாமலிருந்தால், நீ என்றென்றைக்கும் ஜீவிப்பாய், ஆனால் நீ அதைப்

புசிக்கும் நாளிலே, அந்த நாளிலே நீ சாவாய்” என்றார்.

404. ஆதாம், “எப்படியும் நான் இவை எல்லாவற்றையுங் குறித்து வியப்புறுகி றேன்” என்றான். அவன் சென்று அதைப் புசித்து சேதப்படுத்தினான்.

405. தேவன் ஒவ்வொரு முறையும், ஒரு மனிதன் தன்னுடைய உடன்படிக் கையை தேவனோடு செய்யும்போது அல்லது தேவன் ஒரு மனிதனோடு செய்யும்போது, மனிதன் தன்னுடைய பாகத்தை முறித்துப் போடுகிறான்.


ஆகையால் தேவன் ஏதோ ஒரு காரியத்தை செய்ய வேண்டியதாயிருந்தது,

ஏனென்றால் மனிதன் என்னவாயிருந்தான் என்பதை அவர் கண்டார்.

அவர்கள் முன்னியமிக்கப்பட்டிருந் தனர், அவர்கள் தெரிந்துகொள்ளப்பட் டிருந்தனர். எனவே தேவன் ஏதோ ஒரு காரியத்தை செய்ய வேண்டியதாயிருந்தது.

**ஆகையால் தேவன் இறங்கி வந்து, தம்முடைய உடன்படிக்கையை ஆபிரகாமோடு நிபந்தனையற்றதாய் பண்ணினார்.**

**அது நிபந்தனையற்றதாயில்லாமலிருந் தால், ஆபிரகாம் நீண்ட காலத்திற்கு முன்பே இழக்கப்பட்டிருந்திருப்பான்.**



# தேவனுடைய உடன்படிக்கை நிபந்தனையற்றது!



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 53-03-25 இஸ்ரவேலும் சபையும் #1

75. நாம் 8வது வசனத்திற்கு வருவோம், தேவன் ஆபிரகாமையும் அவனுக்குப் பிறகு அவனுடைய சந்ததியையும் எவ்வாறு இரட்சிக்கப் போகிறார் என்று அவர் இங்கே அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணுகிறார்.

இப்பொழுது, அவர் நிபந்தனையற்ற உடன்படிக்கை செய்தார்.

அவன்-அவன் ஆபிரகாமாக இருந்த காரணத்தினால், அவர் அதைச் செய்தது சரியாக இருக்கவில்லை. **அவர், “இப்பொழுது, ஆபிரகாமே, நீ இதைச்**

**செய்தால், நீ அதைச் செய்தால்" என்று கூறவில்லை.**

**அவர், "ஆபிரகாமே, நான் ஏற்கனவே அதைச் செய்து விட்டேன். நீ செய்ய வேண்டியது எதுவுமில்லை. நான் அதைச் செய்து விட்டேன், நானே அதைச் செய்து விட்டேன் !" என்றார்.**

ஆமென். ஓ, என்னே, நான் அதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கும் போது! **தேவன் தாமே அதைச் செய்தார், அது நிபந்தனையற்றதாக இருந்தது. தேவனுடைய உடன்படிக்கை நிபந்தனையற்றது !**

76. **நீங்கள், "நல்லது, சகோதரனே, நான் மாமிசம் புசிப்பதை நிறுத்தி விட்டேன். நான் இதைச் செய்யவில்லை. நான்..." என்று**

**கூறலாம். சகோதரனே, அதற்கு இதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது.**

**நீங்கள் மாமிசம் புசிக்கிறீர்களா என்றோ, மாமிசம் புசிக்கவில்லையா என்றோ, ஓய்வு நாட்களையோ அல்லது அமாவாசைகளையோ** (new moons) **ஆசரிக்கிறீர்களா என்றோ, ஞாயிற்றுக் கிழமையில் ஞாயிறுப் பள்ளிக்குப் போகிறீர்களா என்றோ, இது என்னவாக இருக்கிறது என்றோ அல்ல. நீங்கள் நிபந்தனையற்ற விதமாக இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள்.**

77. அப்படியானால் நீங்கள், "சகோதரன் பிரன்ஹாமே, தேவனுக்கு மகிமை, நான் இரட்சிக்கப்பட்டு விட்டதால், நான் விரும்புகிறதை செய்யலாமே" என்று கூறலாம். ஆம், ஐயா. **சகோதரனே, நீங்கள்**

**இரட்சிக்கப்பட்டு விட்டால், உலகத்தைக் குறித்த எந்த வாஞ்சையும் உங்களுக்கு இராது.** உங்களுடைய முழு இருதயமும் அதன்பேரில் தான் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும், உங்களால் அதில் இருந்து தூர விலகி இருக்க முடியாது. **ஆனால் அங்கே ஒரு பலமான இழுப்பு இருக்கும் காலம் வரையில், அங்கே இன்னும் ஏதோ தவறுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.**

78. **இப்பொழுது, தெரிந்து கொள்ளுதல், தேவன் ஆபிரகாமை அழைத்து, அவர் அவனை நிபந்தனையற்ற முறையில் இரட்சிக்கப் போவதாக அவனிடம் கூறினார்.**



# அவர் தமது சொந்த இரத்தத்தின் மூலம் அவ்வழியை நமக்கு வகுத்துள்ளார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-03-18 முதலாம் முத்திரை

79. கிறிஸ்துவின் மணவாட்டி உபத்திரவ காலத்திற்குள் செல்கிறாள் என்று எங்ஙனம் ஒருவன் கூற முடியும்? என்னால் அதைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. பாருங்கள்? அவள் உபத்திரவ காலத்திற்கு முன்பு எடுக்கப்படுகிறாள்.

சபையானது ஏற்கனவே நியாயந்தீர்க்கப்பட்டிருந்தால், மணவாட்டி இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை ஏற்றுக் கொண்டு அதன் மூலம் நியாயந்தீர்க்கப்பட்டிருந்தால், தேவன் பரிபூரணமாக முற்றிலும் பாவமில்லாத ஒருவனை எங்ஙனம் நியாயந்தீர்க்க முடியும்?


"அவ்விதமான நபர் ஒருவரும் இல்லை'' என்று நீங்கள் கூறலாம்.

80. **மறுபடியும் பிறந்த உண்மையான விசுவாசி ஒவ்வொருவனும் தேவனுக்கு முன் பாக பரிபூரணமாக, முற்றிலுமாக பாவமில்லா தவனாயிருக்கிறான். அவன் தன் கிரியை களில் சார்ந்திராமல், பாவங்களை அறிக்கை யிட்டு பாவங்கள் நீங்கப்பட இயேசுவின் இரத்தத்தின் பேரில் சார்ந்திருக்கிறான். வேதம் அவ்வாறே கூறுகின்றது.** பாருங்கள்? "தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான்''. ஏனெனில் அவன் பாவம் செய்யமுடியாது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் என்னும் வெண்மையாக்கும் திரவம் ஒரு மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே இருக்கும் போது, அம்மனி தனைப் பாவி என்று நீங்கள் எவ்வாறு அழைக்கலாம்? அந்த வெண்மையாக்கும் திரவம் பாவத்தைச் சிதறடித்து, அதை

ஒன்றுமில்லாமல் செய்யும். பாருங்கள்? இயேசு கிறிஸ்துவின் சுத்த இரத்தம் பாவத்தை அதன் வழியாகக் கடந்து செல்ல எவ்வாறு அனுமதிக்கும்? அது ஒருக்கா லும் முடியாது.

81. "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல நீங்களும் பூரண சற்குணராயிருக்க கடவீர்கள்'' என்று இயேசு சொன்னார் (மத். 5:48). நாம் சற்குணராயிருக்க வேண்டு மென்று இயேசு சொன்ன காரணத்தினால் தான் அந்த எண்ணமே நம் மனதில் உதித்தது. நாம் சற்குணராயிருக்கவேண்டு மென்று இயேசு விரும்பினால், அதற்கான வழியையும் அவர் உண்டாக்கவேண்டும். அவர் தமது சொந்த இரத்தத்தின் மூலம் அவ்வழியை நமக்கு வகுத்துள்ளார்.





# அதனால் நாம் எப்பொழுதாகிலும் பாவம் செய்தோமா என்பதை அவர் மறந்தே போய்விட்டார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-06-23M இடைவெளியில் நிற்றல்

37. நான் இக்காலையில் பேசப்போகும் பிரசங்கத்திற்கு “இடைவெளியில் நிற்றல்” என்ற தலைப்பை அளிக்க விரும்புகிறேன்.

38. இப்பொழுது நாம் பேசப்போகிற அல்லது வாசித்த சம்பவமானது, தாத்தான், கோராகு, ஆகியோர், “சபையார் யாவரும் பரிசுத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் இன்னின்ன காரியத்தை செய்ய நீர் விட்டு விட வேண்டும்” என்று மோசேயிடம் கூறிக்கொண்டு, மோசேக்கு கர்த்தர் கொடுத்த அதிகாரத்தில் வீணாக தலை யிடத் தீர்மானித்த சமயத்தில் ஏற்பட்ட சம்பவத்தைத்தான் நாம் இப்பொழுது

வாசித்தோம். அதைப் பற்றிப் பேசப் போகிறேன். வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு ஜனங்களை நடத்திச் செல்லும் படி மோசேக்கு தேவன் கட்டளையிட் டிருந்தார். “நீ மிதமிஞ்சிப் போகிறாய், இக்கூட்டத்திலேயே நீ ஒருவன்தான் எதுவும் பேசவும், சொல்லவும் தகுதி யுடையவன் போல் உன்னை ஆக்கிக் கொள்ள முயற்சி செய்கிறாய்” என்று அவர்கள் மோசேயிடம் கூறினார்கள்.

39. இக்காரியம் தேவனை மிகவும் கோபமூட்டியது. அதினால் அவர் மோசே யிடம், “நீ அவர்களை விட்டு பிரிந்துவிடு. அவர்கள் யாவரையும் அதமாக்குவேன். நான் உன்னிலிருந்து புதிய சந்ததியை ஆரம்பிப்பேன்” என்று கூறக்கூடிய அளவுக்கு ஆகிவிட்டது. மோசேயோ, தேவ சமூகத்தில் வீழ்ந்து, தேவன் தன்

னைத் தாண்டித் தான் போக வேண்டும் என்று கூறினான். பார்த்தீர்களா? - எண் 16:21

40. நாம் தொடர்ந்து தவறாகப் போய்க் கொண்டிருப்பதால், நம்முடைய பாவங் களினால் தேவன் தாம் பரியாசம் பண்ணப்படுவதினால் இளைப்படைந்து, அப்படிப்பட்ட வேளையில், ஜனங்களை அதம் பண்ணப்போகும் போது, மோசே யைப் போல் ஜனங்களுக்காக இன்று யார் நிற்கப் போகிறார்கள்? ஜனங்களுக்காக மோசே இடைவெளியில் நின்றபோது அதை தேவன் ஏற்றுக்கொண்டது போல், இன்று ஜனங்களுக்காக இடைவெளியில் நிற்கவும், அதைத் தேவன் ஏற்றுக் கொள்ளவும் தக்கதான புருஷன் யார் இருக்கிறார்? தேவ கோபத்தையே தடை செய்து நிறுத்தும் அளவுக்கு, மோசேயின்

ஜீவனானது தேவனுக்கு மிகவும் விசேஷித்ததாயிருந்தது. தேவன் மோசேயைத் தாண்டிப் போய்விடமாட்டார். வேதவாக்கியத்திலிருந்து இக்காரியத்தைப் பற்றிய வெளிப்பாடு எனக்கு ஒரு நாள் கிடைக்கும் வரைக்கும் இது ஒரு பெரும் புதிராகவே இருந்தது. மோசேயானவன் எல்லாவிதத்திலும் தன் செயலில் இன்னொருவருக்கு சாயலாக, பதிலீடாக காட்சியளித்தான். அவன் இயேசுகிறிஸ்துவின் சாயலாக இருந்தான்.

41. பாவிகள் யாவரும் மரணாக்கினைக்கு உள்ளாகி, தேவன் முழு உலகத்தினரின் ஜீவனை அழிக்கவிருந்த போது, கிறிஸ்து நம் யாவருக்காகவும் மரித்தார். கிறிஸ்து தமது சொந்தக் குமாரனான படியால், அவரைத் தாண்டிக் கொண்டு (அல்லது மீறிக்கொண்டு) தேவ

னால் வரமுடியவில்லை. இயேசு தம்மையே இலவசமாக தந்தளித்து, அதன் மூலம் உரிய கிரயத்தைச் செலுத்தினார். மோசேயினால் அப்படிப்பட்ட காரியத்தை செய்ய முடிந்திருக்கவில்லை. மோசேக்கோ நம்மைப் போல் மனித இரத்தம் தான் இருந்தது. எனவே, அவனது இரத்தம் போதுமானதாக இருக்கவில்லை . ஆனால் இயேசுவோ தேவனுடைய சொந்த இரத்த மான, சிருஷ்டிக்கும் சக்தி வாய்ந்ததான, தேவ இரத்தமாக இருந்தார். எனவே, தேவன் முழு மனித இனத்தையும் அதின் பாவத்தினின்றும் விடுவித்து விட்டார். ஏனெனில் அவையாவும் அவர் மேல் சுமத்தப்பட்டிருந்தன. அவர் தேவ சமுகத்தை விட்டு புறம்பாக கல்வாரிக்குச் சென்று பாடுபட்டு மரித்தார். நமது பாவங்கள் அவர்மேல் இருந்தபடியால்,

அவர் பாவமானார். அதனால் அவர் பாதாளத்தில் தள்ளப்பட்டார். நமது பாரம் சுமப்பவர், நம்முடைய பாவங்களை தம் மேல் எடுத்துக் கொண்டு கல்வாரிக்குப் போனார். கல்வாரியிலிருந்து அவர் பாதா ளத்திற்குச் சென்றார். தேவன் அவரை மூன்றாம் நாளில், நமது பாவ பிராயச் சித்தத்திற்காக எழுப்பினார்.

42. **இன்று, இயேசுவே தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள மத்தியஸ்த ராயிருக்கிறார்.**

**நாம் இலவசமாக மன்னிக்கப்பட்டிருக்கி றோம்.**

**நாம் பாவம் செய்தோமா என்று கூட தேவன் அறிய மாட்டார்.**

**ஒரு பொழுதும் நினைவுகூரத்தகாதபடி மறதியின் கடலில் நம் பாவங்கள் யாவும் போடப்பட்டுவிட்டன.**

**நாமே இக்காரியத்தை செய்ய முடியாது. ஏனெனில் நாம் முடிவுள்ளவர்கள். அவரோ முடிவற்றவர், எல்லையற்றவர். நாம் முடிவுள் ளவர்கள்.**

ஆதலால், நாம் இன்னும் நினைவில் வைத்திருக்க முடியும். ஏனெனில் நாம் அவ்வளவு பெரிதானவர்களல்ல, ஆனால் அவரோ மிகவும் பெரியவர்.

**அதனால் நாம் எப்பொழுதாகிலும் பாவம் செய்தோமா என்பதை அவர் மறந்தே போய்விட்டார்.**

**அவருடைய சமுகத்தில் நாம் குமாரரும் குமாரத்திகளுமாயிருக்கிறோம்.**

**எவற்றிலெல்லாம் அவர் எப்படியிருந் தாரோ அவ்வாறாக நாம் இருக்கிறோம்.**

**நான் அவருடைய நீதியாகும்படி, அவர் என்னுடைய பாவமானார்.**

**நீங்கள் அவருடைய நீதியாகும்படி, அவர் உங்களுக்காகப் பாவமானார்.**

**எனவே கிறிஸ்து இயேசுவில் உங்க ளுடைய அறிக்கை இருக்கும் வரையிலும் தேவன் உங்களில் பாவத்தைக் காண முடியாது**. - 2 கொரி 5:19,20,21. 1தீமோ 2:5

43. ஒரு சமயத்தில் ஒருவர் இவ்வாறு கூறினார், “அப்படிப்பட்ட ஒரு காரியத்தை நான் விசுவாசிப்பேனென்றால், நாம் மிக வும் குதூகலித்து, ஊரையே அலங்கரித்து, ஒவ்வொரு நடன சாலைக்கும் சென்று,

மிகவும் உற்சாகமாக குடித்து மற்றும் பல்வேறு களிப்பான காரியங்களைச் செய்வேன். ஏனெனில்...." என்று கூறினார். “ஏன் அவ்வாறு செய்வீர்கள்” என்று கேட்டதற்கு அவர், “கிறிஸ்துவில் நீங்கள் ஏற்கனவே பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறீர்கள். எனவே இப்படியெல்லாம் நீங்கள் செய்தால் அதை பாதிக்காதல்லவா?” என்று கூறினார்.

44. **அதற்கு நான் கூறினேன்: “நீர் இப்படியெல்லாம் செய்வது, அதை நீர் பெறவில்லை என்பதைத்தான் காட்டுகிறது” என்று கூறினேன். உங்களுடைய இருதயத்தை தேவனுடைய அன்பானது இயேசுகிறிஸ்துவின் மனவுருக்கத்தில் தொடும் போது, அவரை நீங்கள் மிகவும் நேசிப்பீர்கள், அதனால், உங்கள் பாவத்தைப்போல், உலகமும் உங்களுக்கு மரித்த**

**தாக ஆகிவிடும். அவ்வாறுதான், நீங்கள் உங்களில் பரிசுத்தாவியைப் பெற்றுள்ளீர்கள் என்பதை அறிகின்றீர்கள்.**

நீங்கள் அலறி, சப்தமிட்டு, அன்னிய பாஷைகளில் பேசக்கூடியதாக இருப்பதினாலோ, அல்லது வேறு எவ்விதத்தினாலோ அல்ல; **பாவம் உங்களுக்கு மரித்து இருக்கும் போதும், நீங்கள் இயேசு கிறிஸ்துவில் ஜீவித்திருக்கும் போதும் மாத்திரமே அதை அறியக்கூடும்.**

**தேவனுடைய அன்பு எவ்வளவு ஐசுவரியமுள்ளதாயிருக்கிறது. எவ்வளவு சுத்தமாயிருக்கிறது ! பார்த்தீர்களா?**

45. சமீபத்தில் இங்கே கென்டக்கியிலுள்ள லூயிவில்லில் வாழ்ந்து வந்த ஒரு மாதைக்குறித்து ஒரு ஊழியக்காரர் கூறிக் கொண்டிருந்தார். அவள் தனது இருபத்

தைந்து, முப்பது ஆண்டு வயதுக் காலம் வரையிலும் நீண்ட நாட்கள் திருமண மாகாமல் காத்துக் கொண்டிருந்தாள். அவள் அருமையான உறுதியானதொரு கிறிஸ்துவ பெண்ணாயிருந்தாள். அதே லூயிவில்லில் நல் வாழ்க்கையினை நடத்தாத ஒரு குறிப்பிட்ட மனிதன் இருந்தான். அவன் நாட்டியங்களுக்கும், இரவு விடுதிகளுக்கும் சென்று தன் காலத் தைக் கழித்தவனாயிருந்தான். ஆனால் ஒரு நாள் அவன் தனது பாவங்களுக்கு மன்னிப்பைக் கண்டு கொண்டான். அவன் உண்மையான உறுதியானதொரு கிறிஸ்த வனாக ஆனான். அதற்கு ஓராண்டுக்குப் பிறகு, மேற்சொன்ன அந்த இளம் கிறிஸ் தவ மாதிடம் அவன் காதல் கொண்டான். அந்தப் பெண்மணியும் அவனிடம் ஆழ்ந்த

காதல் கொண்டாள். அவர்கள் இருவரும் மணம் புரிந்து கொண்டார்கள்.

46. அவர்கள் இல்லற வாழ்க்கையை இரண்டு ஆண்டுகள் கழித்த பிறகு, அந்த மாது தன் கணவனிடம் ஒரு நாள் இவ்வாறு கூறினாள்: “என் அன்பரே, புதிதாக கிறிஸ்தவனாக ஆன உங்களுக்கு இது சற்று கடினமாக இருக்கக்கூடும் என்று கருது கிறேன். நான் சிறு பெண்ணாக இருந்தது முதலே கிறிஸ்தவளாக இருந்திருக்கிறேன். ஆனால் இளம் கிறிஸ்தவராக இருக்கும் உங்களுக்கு, இதற்கு முன் இவ்வளவு நீண்ட காலம் நீங்கள் பாவத்தை செய்து கொண்டேயிருந்தபடியினால், பாவத்தின் வஞ்சனைகளையும், சோதனைகளையும் எதிர்த்து நிற்பதென்பது கடினமானது தான்” என்றாள்.

அதற்கு அவன் கூறினான்: “ஆம், அது ஒரு போராட்டமாகத் தான் இருக்கிறது” என்று.

47. அவள் கூறினாள்: “நீங்கள் ஒரு காரியத்தை நினைவில் கொள்ளுங்கள். அதாவது, சத்துருவானவன் உங்களை எங்காவது நிலைகுலையச்செய்து, அத னால் நீங்கள் வீழ்ந்து பாவத்திற்குள் மீண்டும் போய்விடுவீர்களானால், அதினி மித்தம் நீங்கள் வீட்டை விட்டு நீங்கி யிருக்க வேண்டாம். நீங்கள் திரும்பவும் வீட்டிற்கு வந்து விடுங்கள். நீங்கள் திருமணம் செய்து கொண்ட அதே மனைவியை நீங்கள் வீட்டில் காணலாம்.” அவள் மேலும் கூறினாள், “நீங்கள் மீண்டும் ஜெபிக்க நான் உங்களுக்கு உதவுவேன், மீண்டும் தேவனிடத்தில் திரும்புவதற்கு நான் ஜெபத்தின் மூலம்

உங்களுக்கு உதவுவேன். எனவே நீங்கள் தூரமாககபோய்விட நான் விரும்பவில்லை . நீங்கள் எப்படியிருந்தீர்கள் என்ற அடிப் படையின் பேரில் நான் உங்களை மணக்கவில்லை.நான் உங்களை நேசித்த படியினால் மணந்து கொண்டேன். நீங்கள் என்ன செய்தபோதிலும், நான் இன்னும் உங்களை நேசிக்கிறேன். நான் உங்களில் அன்புகூர்ந்தபடியினால் தான் உங்களை மணந்து கொண்டேன்" என்று கூறினாள்.

48. அந்த மனிதன் அந்நாளில் தன் வேலைக்குச் சென்ற பொழுது, தான் வேலை செய்கிற இடத்தில் இக்காரியங் களை பற்றி பிரஸ்தாபித்தது கேட்கப் பட்டது. அவன் கூறினான்: “இப்படிப்பட்ட தான ஒரு பெண்ணுக்கு எதிராக ஒரு மனிதன் எவ்வாறு தவறு இழைக்க முடியும்? ஒரு மனைவி தன் கணவன்

என்ன செய்த போதிலும் அவனை மிகவும் நேசித்து, அவன் மீண்டும் திரும்பி வர வேண்டும் என்று விரும்புவதும், அவனை திரும்பவும் ஏற்றுக்கொள்ள விரும்புவதும், இவ்வாறு மீண்டும் செய்ய முயற்சிப் பதுமான ஒரு காரியத்தை ஒரு பெண் செய்தால் அவளுக்கு எதிராக அவன் எப்படி தவறான எந்த ஒன்றையும் செய்ய முடியும்?" பாருங்கள். **இந்த பெண்ணுக் குள்ள இந்த அன்பை பல கோடி எண்களால் பெருக்கிப் பாருங்கள். அப்பொழுது தேவ னுடைய அன்பு எப்படிப்பட்டது என்பதைப் பற்றிய ஒரு அபிப்பிராயம் உங்களுக்குக் கிடைக்கும்.**

49. ஒரு மனிதன் இயேசு கிறிஸ்து விடம் அன்புகூறும்போது, உலகத்தின் காரியங்கள்... அவர் உங்களுக்கு என்ன செய்தார் என்பதைப்பற்றி வேதத்தின்

வெளிச்சத்தில் நீங்கள் எண்ணிப் பார்க் கையில் -- ஏதோ சில மனக்கிளர்ச்சியின் வெளிச்சத்தில் அல்ல -- **அது என்ன என்பதைப் பற்றிய உண்மையின் வெளிச் சத்தில் பார்க்கையில், அப்பொழுது உங்க ளுக்கு ஏதோ நேரிடுகிறது.** அவ்வமயம் புதிய பிறப்பை நீங்கள் அடைகிறீர்கள். **பாவமானது அப்பொழுது நடு இரவைப்போல் மரித்ததாக இருக்கிறது. ஒளி உங்களி லிருக்கும் வரைக்கும், இருள் எவ்வாறு உங்களில் ஊடுருவும்? அவ்வாறு ஆக முடியாது.** வாக்குத்தத்தத்தைப் பிடித்துக் கொண்டு தன்னையே இடைவெளியில் சமர்ப்பித்த ஒரு மனிதனுக்கு தேவன் அதைத்தான் செய்தார். மோசேயானவன் அந்த முந்தின சாயலுக்கு சாயலாயிருக் கிறான். எனவே தான் அவன் ஜனங் களுக்காக இடைவெளியில் நின்றான்.



# இந்நாட்களில் ஒன்றில், தேவனுடைய வார்த்தையின் மேல் சவாரி செய்து, நான் முகாமிற்கு வந்துகொண்டிருக்கிறேன்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0114 — ஒரு எக்காளம் விளங்காத சத்தமிடுகிறது

228 மிகவும் விலையேறப்பெற்ற நண்பர், பால் ரேடாரை உங்களில் அநேகருக்கு நினைவிருக்கும். அப்பொழுது நான் ஒரு இளம் பிரசங்கியாராய், இளைஞனாயிருந்தேன். நான் வழக்கமாக, அவர் பேசுவதைக் கேட்க, ஃபோர்ட் வெய்னில் உள்ள, ரெடிகர் கூடாரத்துக்குச் செல்வேன். மிகப் பெரிய உருவம் கொண்ட நபர்! அவர் பின்னால் சென்று, தன்னுடைய கால் சட்டைகளை மேலே இழுத்துவிட்டு, தன்னுடைய கரத்தை மேலே உயர்த்தி ஒரு கரடியை போல உறுமுவார், மேலும் பிரசங்கப் பீடத்தி னூடாக அவர் குதிக்கப்போகிறார் என்று

நான் நினைப்பேன். அவர்...அவர் ஆதியா கமத்தில் உள்ள ஒரு பாடப் பொருளோடு தொடங்கி, ஆம், வெளிப்படுத்தின விசேஷம் வரை முன்னும் பின்னுமாக முழுவதும் சுற்றி வருவார். பால் ஒரு முழு நிறைவான மனிதனாய் இருந்தார்.

229 ஒருநாள் பேசிக்கொண்டிருக்கை யில், அவர், "நான் ஓரிகானில் முன்பெல் லாம் ஒரு மரம் வெட்டுபவனாயிருந்தேன்" என்றார், அவர் அங்கிருந்து வந்தவர். "ஒருநாள் உங்களுக்குத் தெரியுமா" என்று கூறி, மேலும் அவர், "நான்—நான் ஊழி யக் களத்தில், எங்கோ தூரத்திலிருந்தேன்" என்று கூறினார். அது எங்கே என்று இப்பொழுதும் நான் மறந்துவிட்டேன். அவர் மிஷனரி ஊழியத்தை செய்து கொண்டிருந்தார்.

230 அவர் தேவனில் விசுவாசம் கொண்டிருந்தார், தெய்வீக சுகமளித்தலில் விசுவாசம் கொண்டிருந்தார். மேலும் பால், இங்கே சரியாக இன்றைக்கு உலக சபை நிற்கிற இடத்திலே என்று கூறினார், அவர், "நான் இங்கே உங்களுடைய கூட்ட தோரோடு செய்ததை செய்துள்ளதற்கு பதிலாக, நான் என்னுடைய கிருபையின் செய்தியை, அசலான பெந்தேகோஸ்தே யினருக்கு விற்றுப் போட்டிருந்தால் நலமாயிருக்கும்" என்றார், "மேலும் அது என்னைக் கவலையடையச் செய்தது, இலட்சக்கணக்கான டாலர்கள் கடன் உள்ள ஒரு இடத்துக்கு அழைக்கப்பட்டேன். ஒரு புற்றுநோய் என்னை பிடிக்கும் அளவிற்கு நான் தானே கவலையடைந்து, இப்போது மரித்துக் கொண்டிருக்கிறேன். நான் என்னுடைய கிருபையின் செய்தியை அச

லான பெந்தேகோஸ்தேயினருக்கு விற்றுப் போட்டிருந்தால், தேவன் அதற்காக என்னை அபரிமிதமாக ஆசீர்வதித்திருந் திருப்பார்.” உண்மையே.

231 அவர் அங்கே அந்த—அந்த காடுகளில் இருந்ததாக அவர் கூறினார், மேலும் அவருக்கு வாந்தியும் இரத்தம் கலந்த சிறுநீரோடு கூடிய காய்ச்சல் அல்லது அதைப்போன்றது வந்துவிட்டது. அது பயங்கரமாக இருந்தது. அவர் காடுகளில் தூரமாக இருந்தார், மேலும் தெய்வீக சுகமளித்தலில் ஒரு உறுதியான விசுவாசியாயிருந்தார். அவர் சுகவீன மடைந்து, சுகவீனமடைந்து கொண்டே இருந்ததாகக் கூறினார். அவர் ஜெபித்தார், ஜெபித்துக்கொண்டே இருந்தார். மிஷினரி மார்களில் சிலர் ஒரு படகில் சென்று ஒரு மருத்துவரை அழைத்து வரப்போவதாக

இருந்ததைக் கூறினர். ஏன், அவர்கள் ஒரு மருத்துவரை அழைத்து வர சில நாட்கள் ஆகும். மேலும் அவர், “நான்—நான்...அதை செய்ய வேண்டாம். அப்படியே விட்டுவிடுங்கள்” என்றார். மேலும், “தேவன் என்னை சுகப்படுத்தா விட்டால், அப்பொழுது நான் பரம வீட்டுக்கு வருவேன்” என்றார்.

232 எனவே அவர் தன்னுடைய மனைவியோடு அறையில் தங்கியிருந்த தாகக் கூறினார். அது இருட்டாகிக் கொண்டே மற்றும் இருட்டாகிக்கொண்டே இருந்ததாம். அவர் தன்னுடைய மனை வியை அழைத்து, “தேனே, என்னுடைய கரத்தைப் பற்றிப் பிடி” என்றாராம். மேலும், “எனக்காக தொடர்ந்து ஜெபித் துக்கொண்டேயிரு. இப்பொழுது இருட் டாகிக் கொண்டேயிருக்கிறது.” என்றாராம்.

தொடர்ந்து, “நிழல்கள் என்னைச் சுற்றிலும் விழுந்து கொண்டிருக்கின்றன என்று நான்—நான் நினைக்கிறேன்” என்றாராம். அவர், “நான் மரிக்கும்போது, என்னுடைய கரத்தைப் பிடித்து…பற்றிப் பிடித்து ஜெபி” என்றாராம். அவர் தாமே, தேவனை சந்திக்கத் துணிந்துவிட்டார்.

233 அவர் ஒருவிதமாக ஞானதிருஷ்டி அடைந்தார். அப்போது அவர் மீண்டும் அங்கே ஓரிகானில், ஒரு வாலிப மனிதனாக, மரங்களை வெட்டுவதாக அவர் சொப்பனம் கண்டதாகக் கூறினார். மேலும் அந்த முகாமின் முதலாளி, “பால், மலையின் ஒரு குறிப்பிட்ட பக்கத்தில் இங்கே மேலே போ, குறிப்பிட்ட அள வுள்ள, ஒரு குறிப்பிட்ட மரம் விழுந்து விட்டது” என்று கூறினாராம்.

234 அவர் தன்னுடைய இளமையான கால்களால் மலையின் மேல் ஓடினதாகக் கூறினார், மேலும் மரத்தை இடித்துத் தள்ளி, அதை வெட்டி, கோடாரியை அதி லேயே குத்தி வைத்தராம். அவருடைய கூர்மையான, பெரிய, இருபுறமும் வெட்டும் கோடாரியானது எவ்வாறு அந்த மிருதுவான பைன், மிக மென்மையான பைன் மரத்துக்குள் பதிந்தது என்று கூறினார். மேலும் அவர் அதைப் பற்றி பிடித்துக்கொண்டு, “சரி, நான் மலைக்கு கீழே இதை சுமந்து செல்வேன்” என்று எண்ணினதாகக் கூறினார்.

235 நல்ல, வலிமையான மனிதன், மேலும் “என்னுடைய முழங்கால்களை எப்படி ஒன்றாக வைத்து, ஒரு மனிதனின் மிகப்பெரிய பாகமான, என்னுடைய முதுகில் அதை எப்படி தூக்குவது என்று

நான் முன்பு பயிற்சி பெற்றிருந்தேன்" என்றார். அவருடைய முதுகு மற்றும் தோள்கள், அவருடைய கால்களின் பின் பகுதியிலும் அவரது தசைகள் உறுதியாக இருந்தன. "நான் ஒரு பெரிய மரக்கட்டையை தூக்கி," அதை தன்னுடைய தோளின் மீது வைத்து நடந்து செல்வேன் என்று கூறினார். ஆனால், "அது ஒரு சாதாரண மரக்கட்டையாக இருந்தது, ஆனாலும்" என்று கூறி, "நான் வெறு மன..." என்றார். [சகோதரன் பிரான்ஹாம் ஒலிபெருக்கியை அழுத்துகிறார்—ஆசி.] (நான் வருந்துகிறேன்.) "என்னால் அந்தப் மரக்கட்டையை வெறுமனே அசைக்கக்கூட முடியவில்லையே" என்றார். (நான் வருந்து கிறேன்.)

236 அவர், "என்னால் அந்த மரக்கட் டையை வெறுமனே அசைக்கக்கூட முடிய

வில்லை” என்றார். அவர் தொடர்ந்து, “நான் சண்டையிட்டேன், மேலும் நான் சண்டையிட்டேன் மற்றும் நான் அதை எடுக்க முயற்சித்தேன், என்னால் அதை எடுக்க முடியவில்லை” என்றார். அவர், “என்னிடத்தில் இருந்த எல்லா பெலத்தையும் நான் பயன்படுத்தினேன்” என்றார். அவர், “என்னால் அந்த மரக்கட்டையை நகர்த்த முடியவில்லை” என்றார். மேலும் அவர், “முடிவிலே, நான் மிகவும் பலவீனமாகிவிட்டேன். எனவே நான் மரத்தின் மீது சாய்ந்தவாறு அமர்ந்து வியர்வையைத் துடைக்க ஆரம்பித்தேன். நான் முற்றிலும் களைப்புற்றுப் போய்விட்டேன்” என்றார்.

237 மேலும், “சிறிது நேரம் கழித்து, நான் என்னுடைய முதலாளியினுடைய சத்தத்தைக் கேட்டேன்” என்றார். ஆனால், “நான் எப்போதும் கேட்டிருந்ததிலேயே

இனிமையான சத்தமாக அது இருந்தது” என்றார். மேலும், “நான் சுற்றித் திரும்பின போது, அந்த சத்தம் என்னிடத்தில், ‘பால்’ என்று கூப்பிட்டது” என்றார். அப்பொழுது நான், ‘ஆம், முதலாளி, இது என்ன?’ என்றேன். ‘நீ எதற்காக அதை இழுத்துக் கொண்டு இருக்கிறாய்?’” என்றார். அவர், ‘“பாருங்கள், இதை முகாமுக்கு கீழே கொண்டுவரும்படி நீர் எனக்கு கட்டளையிட்டீர், நான் தானே இதனால், சோர்வடைந்து போய்விட்டேன். என்னால் —என்னால் அதைச் செய்ய முடிய வில்லை, முதலாளியே’ என்றாராம். அப்பொழுது அவரோ, ‘பால், அந்த நீரோடை *அங்கே* ஓடுவதை நீ பார்க்க வில்லையா?’ என்றாராம். இவரோ, ‘ஆம்’ என்றாராம். அதற்கு அவரோ, ‘அந்த நீரோடை நேராக கீழே முகாமிற்கு

வருகிறது. நீ ஏன் அதை தண்ணீரில் எறிந்துவிட்டு, அதன் மேல் குதித்து, சவாரி செய்து முகாமிற்கு செல்லக்கூடாது?' என்றாராம். அதற்கு அவரோ, 'நான் அதைக் குறித்து ஒருபோதும் நினைக்க வேயில்லை'" என்றாராம்.

238 எனவே அவர் அதை தண்ணீரில் உருட்டித் தள்ளி, அதன் மேல் குதித்து, "ஓ, என்னே!" என்றாராம். அவர் சிற்றலை களுக்கு மேல் செல்லும் போது, மற்றும் தண்ணீரினூடாக கீழே, தண்ணீர் தெறிக்க, குதிக்க, இந்த மரக்கட்டையின் மீது சவாரி செய்துகொண்டே, ஒவ்வொரு காரியத் தைக் குறித்தும், தன்னுடைய உச்ச குரலில் கூச்சலிடத் தொடங்கி, கீழே போய்க் கொண்டே, "நான் அதன்மேல் சவாரி செய்து கொண்டிருக்கிறேன்! அதன் மேல்

சவாரி செய்து கொண்டிருக்கிறேன்!” என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்.

239 அவர் கூறினார், முதலாவது காரியம், அவர் சுய நினைவையடைந்த போது, அவர் தரையின் நடுவில் இருந் தாராம், மற்றும் அவருடைய மனைவி அவரோடு சத்தமிட்டுக் கொண்டிருந்தா ராம். அவர், “நான் அதன்மேல் சவாரி செய்து கொண்டிருக்கிறேன்! நான் அதன் மேல் சவாரி செய்து கொண்டிருக்கிறேன்! நான் அதன்மேல் சவாரி செய்து கொண் டிருக்கிறேன்!” என்று சத்தமிட்டாராம். சகோதரர்களே!

தேசங்கள் உடைந்து கொண்டிருக்கின் றன, இஸ்ரவேல் விழித்தெழுகிறாள்,

வேதாகமம் முன்னுரைத்த அடையா ளங்கள்;

புறஜாதியாரின் நாட்கள் எண்ணப் பட்டு, பயங்களால் சூழப்பட்டுள்ளன;

“ஓ, சிதறப்பட்டரே, உங்களுடைய சொந்த இடத்துக்கு, திரும்புங்கள்.”

240 தேவனுடைய வார்த்தையின் இந்த செய்தி சத்தியமாய் இருக்கிறது. ஜீவித் தாலும் அல்லது மரித்தாலும், நான் அதன் மேல் சவாரி செய்து கொண்டிருக்கிறேன். நான்...நான் அதனோடு சண்டையிட்டுக் கொண்டிருக்கவில்லை. நான் அதைக் குறித்து சண்டையிட முயற்சித்துக் கொண் டிருக்கவில்லை. நான் அதை அப்படியே எடுத்துக்கொண்டு, நான் அதன்மேல் சவாரி செய்து கொண்டிருக்கிறேன். விமர்சகர்கள் எழும்பட்டும். நான் ஒவ்வொரு நீரோடை சுழலையும் பாய்ந்து செல்வேன். இந்நாட் களில் ஒன்றில், தேவனுடைய வார்த்தை யின் மேல் சவாரி செய்து, நான் முகாமிற்கு

வந்துகொண்டிருக்கிறேன். ஆமென். நான் அங்கே சென்றடைய, நிச்சயமுடையவனாய் இருக்கிறேன்.

நாம் ஜெபம் செய்வோமாக.

241 நீங்கள் உங்களுடைய பாவ சுமையோடு அலைய விரும்புகிறீர்களா? நீங்கள் இந்த நிலைமையிலிருந்து, நீங்கள் எங்கே நின்றுகொண்டிருக்கிறீர்கள் என்பதை அறியாதிருந்து, ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்கு, ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஏன் ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்களே ஏன் அதைத் துடைத்தெறிந்துவிட்டு, சிலுவையின் மேல், இன்றிரவு, வார்த்தையின் மேல் சவாரி செய்யக்கூடாது? நீங்கள் ஏன் இன்றிரவு தேவனுடைய வாக்குதத்தத்தத்தை ஏற்றுக்கொண்டு, குழப்பத்திலிருந்து வெளியேறி, பெரிய நீலநிற, அந்தவிதமாக பரந்த

ஆகாயத்தினூடாக சவாரி செய்யக் கூடாது? அதனோடு சண்டையிட வேண் டாம். அதைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம். அதை அப்படியே விசுவா சித்து, அதை ஏற்றுக் கொள்ளுங்கள். இது ஒரு அசைக்கப்பட முடியாத இராஜ்ஜிய மாய் இருக்கிறது. அதன் மேல் சவாரி செய்யுங்கள்.

242 இன்றிரவு நீங்கள் சுகவீனமா யிருந்தால், “உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிற கர்த்தர் நானே” என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.

243 “சகோதரன் பிரான்ஹாமே, நான் எப்படி குணமடையப் போகிறேன்? எனக்கு இருதய கோளாறு உள்ளது, எனக்கு புற்றுநோய் உள்ளது என்று மருத்துவர் கூறுகிறார், எனக்கு *இது*, *அது*,

எதுவாக இருந்தாலும் சரி. நான் செவிடாய், ஊமையாய் இருக்கிறேன். நான் குருடாயிருக்கிறேன்." என்ன, அது என்ன வித்தியாசத்தை உண்டுபண்ணு கிறது? அப்படியே தேவனுடைய வாக் குத்தத்தத்தை ஏற்றுக்கொண்டு, அதன் மேல் சவாரி செய்யுங்கள்.


244 நாம் ஒரு மிகப் பெரிய கோலை எடுத்து, அதை இங்கே கீழே நட்டு வைத்து, அதனுடைய உச்சியின் மேல் எழுது வோமாக, "விசுவாசமுள்ள ஜெபம் இன்றிரவு ஜெபிக்கப்பட்டுள்ளது; நான் அதன் மேல் சவாரி செய்யப் போகிறேன். வேதம், 'விசுவாசமுள்ள ஜெபம் பிணி யாளியை இரட்சிக்கும், தேவன் அவனை எழுப்புவார். அவன் பாவம் செய்திருந் தாலும், அது அவனுக்கு மன்னிக்கப்படும்' என்று கூறியுள்ளது. நான் அதன்மேல்

சவாரி செய்து கொண்டிருக்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன்."

245 நீங்கள் தவறு செய்திருந்தால், நீங்கள் இன்றிரவு வழிதவறியிருந்தால், "தன் பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். ஆனால் தன் பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." ஏன் அதை அறிக்கை செய்யக்கூடாது?

"பாருங்கள், சகோதரன் பிரான்ஹாம், நான் என்ன செய்ய வேண்டும்?"

246 அதை அறிக்கை செய்யுங்கள், அதன்பின்னர் அதன் மேல் சவாரி செய்யுங்கள். தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார். அது உங்களுடைய பாவத்திலிருந்து உங்களைக் கொண்டு செல்லும்.



# இளைப்பாறுதல்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து